NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 27 August 2018

## செய்திக்கொத்து

# அறிவார்ந்த தேசத் திட்டங்கள்: பெரும்பாலானோர் நம்பிக்கை

அண்மையில் சிங்ஹெல்த் அமைப்பு இணையத்தாக்குதலால் பாதிக்கப்பட்டது. அதன் இணையத்தளம் ஊடுருவப்பட்டு நோயாளிகள் சிலரின் தனிப்பட்ட விவரங்கள் திருடப்பட்டன.

சிங்கப்பூரின் அறிவார்ந்த தேசம் முயற்சியை இந்தச் சம்பவம் சிறிதளவு பாதித்துள்ளது. ஆனால் இத்தகைய இணையத்தாக்குதல் முயற்சிகளை அதிகாரிகள் செவ்வனே முறியடிப்பர் எனப் பெரும்பாலான சிங்கப்பூரர் நம்பிக்கை கொண்டுள்ளதாக கொள்கை ஆய்வுக் கழகம் நடத்திய ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த ஆய்வில் 1,027 பேர் பங்கெடுத்தனர். அவர்களில் 53.4 விழுக்காட்டினர் அடுத்த ஓராண்டில் சிங்கப்பூர் நடைமுறைப்படுத்தும் அறிவார்ந்த தேசத் திட்டங்கள் மீது நம்பிக்கை கொண்டுள்ளனர்.

சிங்ஹெல்த் இணையத்தாக்குதலுக்கு முன்பு இந்த விகிதம் 55.9 விழுக்காடாக இருந்தது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.